# பட்டதாரி மாணவர்களின் மென்திறன்களை வளர்ப்பதில் பட்டக்கற்கைகளின் செல்வாக்கு

**கணபதி. க [a]* மற்றும் யேசு. மு [b]**

பண்பாட்டுத்துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

* email@example.com

**விரிவான ஆய்வுச் சுருக்கம்**

## 1. அறிமுகம்

அறிமுகம் பொதுவாக ஒரு பின்னணி மற்றும் ஆய்வின் தர்க்க ரீதியான முக்கியத்துவம் தொடர்பில் குறிப்பிடுவதாக அமைந்திருக்க வேண்டும். இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில் குறிப்பிட வேண்டும்.

1. ஆய்வுப் பின்புலம்
2. ஆய்வுப் பிரச்சினை
3. ஆய்வு வினாக்கள்
4. ஆய்வின் நோக்கங்கள்

## 2. இலக்கிய மீளாய்வு

இலக்கிய மீளாய்வு என்பது ஆய்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைப்பில் முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகள் தொடர்பான விரிவான விடயமாகும். இலக்கிய மீளாய்வுக்கு ஆய்வுடன் தொடர்புடைய புலமைத்துவமிக்க கட்டுரைகள், புத்தகங்கள் மற்றும் பிற ஆதாரங்களைப் பயன்படுத்தலாம். இலக்கிய மீளாய்வில் முன்னைய ஆய்வுகளை சுருக்கமாக, புறநிலையாக மதிப்பீடு செய்து தெளிவுபடுத்த வேண்டும்.

## 3. ஆய்வு முறையியல்

இந்தப் பிரிவு பொதுவாக பின்வரும் தகவல்களை உள்ளடக்கியது: ஆய்வின் வகை, ஆய்வு வடிவம் (குறிப்பிட்ட ஆய்வு முறைகளைத் தேர்ந்தெடுப்பதற்கான உங்கள் நியாயப்பாடு), ஆய்வுப்பிரதேசம், ஆய்வு ஒழுங்கமைப்பு, மாதிரி வடிவமைப்பு, தரவு சேகரிப்புக் கருவிகள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு முறைமை.

இவற்றோடு, ஆய்வுப் பிரச்சினை, ஆய்வு வினாக்கள், ஆய்வின் நோக்கங்கள் ஆகியன அறிமுகத்தில் குறிப்பிடப்படாவிடில் அவை யாவும் இங்கு ஆய்வு முறையியல் ஆரம்பத்தில் தரப்படமுடியும்.

## 4. முடிவுகள் மற்றும் கலந்தாராய்வு

இந்த பகுதி ஆய்வின் முடிவுகளை வழங்குகிறது. பந்திகளாக விரித்து விளக்கங்களை குறிப்பிடுவதை விட விளக்கமான புள்ளிவிவரங்கள் அல்லது அட்டவணைகளின் மூலம் முடிவுகளை விபரிப்பது விரும்பப்படுகிறது. இந்தப் பிரிவு முன்னைய ஆய்வுகள் மற்றும் உங்கள் ஆய்வுப்பரப்புடன் தொடர்புடைய துறையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவுத் தளத்தில் உங்கள் ஆய்வின் முடிவுகளைப் பற்றிய விவாதத்தை உருவாக்குவதாக அமையும்.

## 5. முடிவுரை

ஆய்வின் பிரதானமான முடிவுகள் மற்றும் கலந்தாராய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளக்கூடிய முடிவுகள் குறித்து இங்கு சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

## 6. உசாத்துணை

இந்தப் பிரிவு குறிக்கப்பட்ட வடிவமைப்பில் உசாத்துணைகளை கொண்டிருக்கும். அங்கீகரிக்கப்பட்ட நியம உசாத்துணை வடிவமைப்பை பின்பற்றுதல் வேண்டும். உசாத்துணைகளின் எழுத்துரு அளவு 11.

